**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**E.A.75/2017**
**E.P.91/1997**
**அசல் வழக்கு எண்.193/1996**

**2019 ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் நாள்**
சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | வயது | 47 |
| த.பெ. | பாண்டியன் | மதம் | |
| முகவரி | | தொழில் | Senior Revenue Inspector, Sub-Collector Office, Tiruppur |

**<u>முதல் விசாரணை</u>**

**<u>நான் இந்த வழக்கில் மனுதரர் தரப்பு 26 ம் சாட்சி (PW26)(31.01.2019)</u>**

இம்மனுவில் சாட்சியம் அளிப்பதற்கு சார் ஆட்சியர் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது, இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு சார் ஆட்சியர் திருப்பூர் அவர்கள் அதிகாரம் கொடுத்துள்ளார். 25.10.2018 தேதியிட்ட Ref No.50/2018/A2 கடிதத்தின் அசல் சாட்சி சான்றாவணம் EX-X7. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேனா என்றால் நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ந.க.எண்.71962/89/02 கோப்பு தற்போது எங்கள் அலுவகத்தில் இல்லை. மேற்படி கோப்பு எங்கள் அலுவலகத்தில் பாராமரிக்கப்படவில்லை என்பதற்கு சார் ஆட்சியர் திருப்பூர் அவர்கள் கடிதம் கொடுத்துள்ளார். 25.10.2018 தேதியிட்ட Ref No.50/2018/A2 சார் ஆட்சியர் திருப்பூர் அவர்கள் வழங்கிய கடிதத்தின் அசல் சாட்சி சான்றாவணம் EX-X8.

**<u>குறுக்கு விசாரணை இல்லை.</u>**